Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 18 (01-02-1992) சனிக்கிழமை ஓசை: 348

மாணவர் உணவு முத்திரை

## அதிபர்களின் அசட்டையே தாமதத்திற்கு காரணமாம்

யாழ். மாவட்ட பாடசாலைஅதிபர்களின் அக்கறையின்மையே மாணவர் உணவு முத்திரையை தொடர்ந்து வழங்க முடியாத நிலைக்கு காரணம் என நேற்று நல்லூர் சி. சி. பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பாடசாலை அதிபர்கள் முத்திரைகள் பற்றிய விபரங்களை உரிய காலத்தில் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்காததினால் கொழும்பிலிருந்து புதிய முத்திரைகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை. இதனால் கடந்த காலங்களில் 56 மில்லியன் ரூபாவிற்குப்பதிலாக 23 மில்லியன் ரூபாமட்டுமே (4 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கு ஆளும் கட்சி தீர்வு திட்டம் வைக்க மறுப்பு

(கொழும்பு)

தமிழர் தேசிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சிபார்சுகளை மேற்கொள்ளவென நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு முன் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சி தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்க மறுத்துள்ளது. அத்தோடு தீர்வுத்திட்டம் ஒன்றை வைக்க வேண்டிய அவசியம் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் வற்புறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் வாராந்தச் செய்தியாளர் மத்தியில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தனியான யோசனை ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பிக்கத் தேவையில்லை எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஐ. தே. கவிற்கு ஆர்வம் இருப்பதனால்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஆதரவு அளிக்கப்படுவதாகவும் ஐக்கிய தேசிய கட்சியினதோ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதோ தனித்தனியான யோசனைகளைத் தெரிவிப்பதைவிடவும் அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாடே அவசியமானது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் உறுதி கொண்டுள்ளதென அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கனேடிய மனித உரிமைக் குழுவின் குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில் இணக்கமான வழிமுறையூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார்.

### வர்த்தகர் சங்க தீர்மானம்

(நல்லூர்)

நல்லூர் உதவி அரசாங்க (4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்தில் 300 புலிகளே உள்ளனராம்

—சரத்முனசிங்க

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சுமார் முந்நூறு விடுதலைப் புலிகளே இருப்பதாகவும், அவர்களே வெவ்வேறு அணிகளாகப் பிரிந்து சென்று தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் கூட்டுப்படைத் தலைமையலுவலகப் பேச்சாளர்கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டைத் தாக்கவிருக்கும் இராணுவத்தினரை திசை திருப்பவும், இந்தியாவிலிருந்து தமிழ் மக்கள் திரும்பி வருவதைத் தடுப்பதுமே இத் தாக்குதல்களின் நோக்கமாக இருக்கலாமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## விமானப் படையினரின் சம்பளத்திற்கு நடந்ததென்ன?

(கொழும்பு)

திருக்கோணமலை சீனன்குடா விமானத்தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் [illegible]

இடம்பெற்ற நேரத்தில் ஆயுதப் பண்டசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல இடங்களில் படையினருக்குச் சம் [illegible]

## ஜேர்மனியில் குருநகர்வாசி கத்திக்குத்துக்குப் பலி

குருநகர் இளைஞர் ஒருவர் ஜேர்மனியில் வைத்து கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானாரென தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் கடந்த (27. 1. 92) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றது.

சில்லாலை வாசியின் கத்திக்குத்துக்கு இரையானவர் குருநகர் புதிய கடற்கரை வீதியைச் சேர்ந்த மிக்கேல்பிள்ளை சூரி (வயது 24)என்பவராவர். (21

## புலிகளின் தலைவர்மீது இந்தியா குற்றச்சாட்டு

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகத் தலைவர் பிரபாகரன்மீதும், பொட்டு அம்மான்மீதும்இந்தக்கொலை பற்றி விசாரிக்கும் நீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இருவரையும் சரண் அடையும்படி வழக்கை விசாரிக்கும் நீதிபதி எஸ்.எம். சித்திக் அறிவித்துள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பாகப் புலனாய்வு செய்துவரும் இந்திய மத்தியப் புலனாய்வுத் துறையின் சிறப்புக் குழுவின் மனுவைஏற்றுக்கொண்டு இந்த அறிவித்தலை வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதரவு தேடி பிரட்மன் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

பிரட்மன் வீரக்கோன் ஜப்பான் பயணமானார். சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரான இவர், பிரான்ஸில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது இலங்கைக்கு அதிகளவு நிதி ஒதுக்குவதற்கு ஜப்பான் ஆதரவு கோரியே பயணம் மேற்கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்ட குண்டு வெடிப்பினால் சிறிலங்கா விமானப்படையினருக்கு கொடுக்கப்படவிருந்த சம்பளப் பணமும் நாசமாகிப் போயிருக்கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பு களில் படையினருக்குச் சம்பளம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. குண்டு வெடித்ததும் சம்பளம் வழங்கியவர்களிலும், எடுக்க நின்றவர்களிலும் சிலர் காயப்பட்டனர். சிலர் பணத்தை வைத்துவிட்டுச் சென்றனர்.

இளைஞர்களைப் பார்வையிட

### சிறைச்சாலை அத்தியட்சகர் அனுமதிமட்டும் போதுமாம்

(கொழும்பு)

தென்னிலங்கைப் பகுதிச் சிறைகளில் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் வடக்கு, கிழக்குடபகுதிகளைச்சேர்ந்த இளைஞர்களைஉறவினர்கள் சென்று பார்ப்பதற்கு அந்தந்த சிறைச்சாலைகளின் அத்தியட்சகர்களின் அனுமதிமட்டுமே போதுமானது என்று பாதுகாப்பு அமைச்சின் சட்டத்துறைச் செயலாளர் அறிவித்துள்ளார்,

மலையகத்தில்

### பொலிஸ் நிலையங்களை புலிகள் தாக்க திட்டமாம்

(கொழும்பு)

ஊவாப் பகுதியில் இரண்டு பொலிஸ் நிலையங்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டியிருப்பதாக ஊவாப் பகுதி பொலிஸ் அத்தியட்சகர் ரெறி அமரசேகர கூறியுள்ளார். இத் தகவலை வெளியிட்ட நேற்றைய 'ஐலன்ட்' நாளிதழ் மேலும் தகவல் தருகையில் இதற்கென ஆட்களும், ஆயுதங்களும் மேலதிகமாக இப்பகுதிக்குள் கொண்டுவரப்படவிருந்ததாகத் தெரிவித்துள்ளது.

### தங்கக்கட்டிகள், பற்றறிகள் வடபகுதி லொறி பிடிபட்டது

[வவுனியா]

பெருந்தொகை தங்கக்கட்டிகள், நகைகள், ரோச் பற்றறிகள்' சைக்கிள் சன்னங்கள், போட்டோ பிரதிபண்ணும் மெஷின் பவுடர் போன்றவற்றை மறைவாக வடபகுதிக்கு எடுத்து வந்த லொறி ஒன்றை வவுனியா சர்வோதய முகாமில் வைத்து இராணுவ பொலிஸார் கடந்த புதன் கிழமை கண்டுபிடித்துள்ளனர்.

அனுமதிப்பத்திரத்துடன் மண்ணெண்ணெய் நிரப்பிக் கொண்டு கிளிநொச்சி செல்லவிருந்த மேற்படி லொறியின் அடிப்பாகத்தில் இணைக்கப்பட்ட பெட்டியொன்று இருப்பதாக இராணுவத்தினர் சந்தேகம் கொண்டனர்.

அப்பெட்டியை சோதனை செய்த போது அதனுள்ளே 56 சிங்கப்பூர் தங்கச்சங்கிலிகள், 10 தங்கக் கட்டிகள், 72 சோடி பற்றறிகள் போட்டோ பிரதி மெஷின் பவுடர் என்பன மறைத்து வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகள் ஒவ்வொன்றும் தலா 14 பவுண் எடை உடையது

(4ஆம் பக்கம் பார்க்க)

### போதனாவைத்தியசாலை கழிவகற்றும்திட்டம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் பலமாதங்களாக தேங்கியுள்ள கழிவு நீரை அகற்றும் திட்டம் வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பம்பியூடாக இக்கழிவு நீரை பண்ணை கடலுக்குள் அனுப்ப பரீட்சார்த்தமாக நேற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போதே எதிர் பார்த்ததிலும் பார்க்க விரைவாக இக்கழிவுகள் அகற்றப்படக் கூடியதாக இருந்தது.

இதனால் இரண்டு பம்பிகளை நிரந்தரமாக இவ் வேலைக்கு பயன்படுத்துவதன் மூலம் தினமும் கழிவுகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதானோர்பற்றி விபரம் சிறிலங். வெளியிடுவதில்லை

### கனேடிய மனித உரிமைகள்குழு கண்டனம்

சிறிலங்காவில் 'பயங்கரவாதிகள்' என்ற சந்தேகத்தின்மீது கைது செய்யப்படுபவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற தகவலை அரச அதிகாரிகள் உறவினர்களுக்கு அறிவித்ததோ அல்லது தெரியப்படுத்தியதோ இல்லை என்று சிறிலங்காவின் மனித உரிமைகள் மீறல் பற்றி விசாரிக்க அண்மையில் எட்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சிறிலங்காவுக்கு வந்த கனேடியக் குழு குற்றம் சாட்டியுள்ளது.

சிறிலங்காவில் படைகளினால் பொதுமக்கள் சட்ட விரோதமாகக் கைது செய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, கொல்லப்படுவது, அத்துமீறி மனித உரிமைகள் மீறப்படுவதும் தமக்குக் கவலையைத் தந்திருப்பதாக கனேடிய மனித உரிமைகள் குழுவின் தலைவரும், முன்னாள் உலக திருச்சபைகளின் தலைவருமான அதிவண. லூயி வில்சன் பி. பி. ஸிக்கு வழங்கியபேட்டியில் குறிப்பிட்டார்.

இப்படிப்பட்ட கண்டனக் குரல்கள் இந்த வாரம் எழுப்பப்பட்டிருப்பது மனிதஉரிமை மீறல்கள் குறித்து சிறிலங்கா அரசு எடுத்த நடவடிக்கைகளுக்குப் பின்னரும் கூட மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் மனித உரிமை மீறல்கள் அன்றாட நடவடிக்கையாகி விட்டன என்பதையே எடுத்துக் காட்டுகின்றன என்று பி. பி. ஸி. தெரிவிக்கிறது.

## வவுனியாவில்பயணிகள்மீது எறிகணைத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் வைத்து பயணிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்டதுப்பாக்கிப் பிரயோகத்தில் இருந்து பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை 8.30 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

வடபகுதியிலிருந்து வரும் பயணிகள் இராணுவ சோதனைக்கு முன்னதாக நொச்சிமோட்டையில் காத்துநிற்பர். படையினர் சமிக்ஞை காட்டிய பின்னரே தடைமுகாமை நோக்கி பயணிகள் செல்லத் தொடங்குவர்.

பயணிகள் குவிந்து நின்ற சமயத்தில் திடீரென மழை பெய்ய ஆரம்பித்தது. பயணிகளுக்கு தங்குவதற்கு இடமில்லாது நொச்சிமோட்டைப் பாலத்திற்குக் கீழே ஒதுங்கிக் கொண்டனர்.

சிறிது நேரத்தில் பாலத்தை நோக்கி ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் பாதுகாப்புத்தேடி நாலாபுறமும் சிதறி ஓடினர். பயணிகள் தப்பியோடியதால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

மழையும் தாக்குதலும் ஓய்ந்த பின்னர் பயணிகள் தடைமுகாமை நோக்கி வரத் தொடங்கினர்.

''பாலத்தின் கீழ் ஏன் ஒதுங்கினீர்கள்'' என தடைமுகாமிலுள்ள படையினர் பயணிகளிடம் வினவினராம்.

### முல்லை. கிராமங்கள் மீது ஏறிகணை வீச்சு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினரால் பலத்த எறிகணை வீச்சும் துப்பாக்கி பிரயோகமும் இடம்பெற்றுள்ளது இதனால் சிலாவத்தையை அடுத்துள்ள கிராமங்களில் பொதுமக்களின் குடியிருப்புகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து சிலாவத்தைப் பக்கமாக நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் பலத்த எறிகணை வீச்சும் 50 கலிபர் துப்பாக்கி பிரயோகமும் சுமார் ஒருமணி நேரம் மேற்கொள்ளப்பட்டது. எறிகணைகள் முல்லைத்தீவு, சிலாவத்தை, மணலாறு பகுதிக

(4ஆம் பக்கம் பார்க்க)

### மலைநாடு என்பதே ஒரு தனி நாடுதான்

#### தொண்டமான்

(கொழும்பு)

மலை நாடு என்று புதிதாக ஒரு நாட்டை அல்லது பெயரை உண்டாக்கத் தேவையில்லை. 'கந்துரட்ட' என்ற சிங்களச் சொல் 'மலைநாடு' என்பதைத்தான் குறிக்கிறது. ஆகவே மலை நாடு என்று தனிநாடு கோர வேண்டியதில்லை என இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு புறப்படுவதற்கு முன்னர் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆலோசகரான இவர், பிரான்ஸில் நடைபெறவிருக்கும் கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2-வது தடவைவந்தோரில் 150 பேர் அரச ஊழியர்

தமிழகத்திலிருந்து இரண்டாவது தடவையாக திருக்கோணமலை வந்து சேர்ந்த அறுநூற்றி ஐம்பதொன்பது பேரில் நானூற்றி ஐம்பத்தைந்து பேர் அரசாங்க ஊழியர்களாவர்.

இதேவேளை முதலாவது கப்பலில் வந்தவர்களில் மூன்று குடும்பத்தினர் மட்டுமே [illegible] அடுத்த கப்பல் எதிர்வரும் பத்தாம் திகதி வந்து சேரும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

குடாக்கடலில் கைதான

### மீனவர் விவகாரம் கொழும்புடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பது தொடர்பாகச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைப் பிரதிநிதி கொழும்புடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கடந்த வாரம் தீவகப்பகுதிக்கு விஜயம்செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அங்கு இராணுவ அதிகாரிகளிடம் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பது தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத்தினர். அங்கு கடற்படைத் தளபதி தாம் கைதுசெய்த இருபது மீனவர்களையும் இராணுவத்தினரிடம் ஒப்படைத்துவிட்டதாகக் கூறினாராம். இதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரியிடம் பிரதிநிதிகள்கேட்ட போது தாம் அவர்களை மன்னார்இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

இதனால் இம்மீனவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். கிளை கொழும்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கிளையுடன் தொடர்புகொண்டுள்ளது. (ச)

### வெகுசனப்போராட்டத்திற்கு மக்கள் அணிதிரள்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள்மீது சிறிலங்கா அரசினால் மேற் கொள்ளப் பட்டுவரும் இராணுவ அட்டூழியங்களையும் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் கண்டித்து வெகுஜன போராட்டங்களை நடாத்துவதற்கு பொது மக்கள் தயாராகி வருகின்றனர். இதற்காக கிராம மட்டத்திலான கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் பலவேறு இடங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்திலும், நேற்று கரையோரப் பகுதிகளிலும் மேற்படி கருத்தரங்குகள் நடைபெற்றன.

### இனவெறி சர்வோதயத்தை வெளியேற்றுவோம்

(யாழ்ப்பாணம்)

இனவெறியும், அரசியல் நோக்குப்கொண்ட சர்வோதயத்தை வடக்கு, கிழக்கில் இருந்து வெளியேற்றுவோம் என்ற தலைப்பில் பாதிக்கப்பட்ட மக்கள்சார்பில் பிரசுரம் ஒன்று நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இனக்கலவரங்கள், இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதியில் செய்யப்பட்ட மோசடி, இந்திய இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென பெறப்பட்ட 18 கோடி ரூபாவைப் பாதிக்கப்பட்டமக்களுக்குச் சரியானமுறையில் வழங்காமை, வெளிநாட்டுநிறுவனங்களால் வடக்கு, கிழக்குப்புனர் நிர்மாணத்திற்கென வழங்கப்பட்ட நிதிகளைச் சிங்களக்குடியேற்றவாசிகளுக்கு வழங்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஏற்பாடுகளோ தடல் புடல் முதல்வரோ வரக்காணோம்

குண்டு துளைக்காத மேடை' ஹெலிகொப்டர் வந்திறங்க ஹெலிபேட், ஒன்பதினாயிரம் பேர் அமர்கிற பந்தல், மின் கம்பங்கள் இவையெல்லாம் 'ரெடிமேட்'டாக தயாரிக்கப்பட்ட போதும் பாதுகாப்பைக் காரணம் காட்டி விழுப்புரத்திற்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா செல்லவேயில்லை என தமிழகப் பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

விழுப்புரத்திற்கு நான்கு முறை தமிழக முதல்வர் செல்வதாக இருந்து பின்னர் கடைசி நேரத்தில் அவை ரத்துச் செய்யப்பட்டன.

இந்த ஏற்பாடுகள் யாவும் மக்கள் செலவிலேயே மேற்கொள்ளப்பட்டன.

டிசம்பர் 21 ஆம் திகதி சனிக்கிழமை ஜெயலலிதா விழுப்புரம் வருவதாக நிகழ்ச்சியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே அக்டோபர் மாதமே முதல்வர் வரப்போவதாக அறிவித்து, கடைசியில் காவிரிப்பிரச்சினையை காரணம் காட்டிச் செல்லாமல் இருந்தவர்.

ஆகவே இந்தமுறை விழுப்புரம் செல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. விழுப்புரத்தில் முதல்வரின் வருகைக்காக பலவேறு வகையிலும் எதிர்பார்ப்புகள் காத்துக் கிடந்திருந்தன.

தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் தனது ஊழியர்களுக்காக உருவாக்கிய குடியிருப்பை முதல்வரால் திறந்து வைப்பதற்காக காத்திருந்தது. குடியிருப்புப் பகுதி வீடுகள் கட்டுமானப்பணி முடிந்த பிறகும் பூட்டியே கிடக்கின்றன. வீட்டுக்காகத் தங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியை செலுத்தி வரும் ஊழியர்கள் 'முதல்வர் எப்போ வருவார். வீடு எப்போ தருவார்' என்று தவம் கிடக்கிறார்கள்.

இதனைவிட இருநூறு கோடி ரூபாய்க்கு வளர்ச்சிப் பணிகளைமுதல்வர்தொடக்கி வைப்பார் என ஏற்பாடுகளைப் பார்வையிட வந்த மாநில அமைச்சர்கள் ஆனந்தன். செங்கோட்டையன். அழகு திருநாவுக்கரசு. கிருஷ்ணன். கண்ணப்பன் ஆகியோர் தெரிவித்திருந்தனர். இதனால் எல்லாத் துறைகளும் பல கல்வெட்டுக்களைத் தயார் செய்தன.

அடுத்து முதல்வரின் வருகையை ஒடிய ஏற்பாடுகள் ஆரம்பமாகின. முதல்வர் ஹெலிகொப்டரில் வந்து இறங்குவதால் அதற்காக அவசர அவசரமாக ஹெலிபேட் தயாரிக்கப்பட்டது. இதற்காக பிளாட் போட்டு விற்கப்பட்ட மனைத் தொகுப்பு ஒன்றில் இருந்து இருநூறு பேரின் பிளாட்கள் எடுதுக் கொள்ளப்பட்டன.

குண்டு துளைக்காத மேடை இரவோடு இரவாகத் தயாரிக்கப்பட்டது. திடீர் மழை வந்தால் மக்கள் நனையக்கூடாது என்பதற்காக ஒன்பதினாயிரம் பேர் அமர்கிறமாதிரி பந்தல், மின்சாரத் தேவைக்காக இருபது மின்கம்பங்கள் அமைக்கபபட்டன.

இதற்காக இருபத்தைந்து ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டனர், குண்டு துளைக்காத மேடை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு ஊழியர் இறந்தது போன்ற சம்பவங்களும் இடம் பெற்றன.

இவை ஒரு புறம், காவல் துறையின் பலமான ஏற்பாடுகள் ஒரு புறமும் மேற்கொள்ளப்பட்டன. நான்கு இன்ஸ்பெக்டர்கள், பத்து சப்-இன்ஸ்பெக்டர்கள், முப்பது கான்ஸ்டபிள்கள் அங்கேயே முகாமிட்டுத் தங்கினர்.

இதற்குள் கட்சிக்காரர்கள் அவர்கள் பங்குக்கு ஏற்பாடுகளைச் செய்தனர். ஒருவர் முதல்வருக்குப் பரிசாக கொடுக்க யானைக் குட்டி வாங்க தேக்கடிக்கு சென்றார்.

இவ்வாறான பலத்த ஏற்பாட்டின் முடிவில், ''முதல்வர் வரமாட்டார்'' என மாவட்டக் கலெக்டர் 17 ஆம் திகதி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து டிசம்பர் 29, ஜனவரி 4 ஆம் திகதிகளில் முதல்வர் வருவார் என்று பேசப்பட்டு அவை வெறும் வதந்திகளாகி விட்டன. இந்த நிலைமையில் முதல்வர் வரும் திகதியை முதல்வர் செல்வி ஜெயலலிதாவே அறிவித்தால் கூட விழும்புரம் மக்கள் நம்ப மாட்டார்கள் என்றே தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### பழைய அரசியற் புத்தகங்கள்

இயக்கங்களின் கூட்டணியினரின் மற்றும் ஈழத்து அரசியற் புத்தகங்கள். பத்திரிகைகள் தற்போதைய பெறுமதியில் பெற்றுக் கொள்ளப்படும். ய ழ். பழைய புத்தகக்கடை, 82 அருச்சுனா (ஸ்ரான்லி) வீ தி. (2159)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் நிறைய

## வர்த்தக ஆசிரியர் பயிற்சி நெறி

## ஆசிரியர் கலாசாலை

## கிழக்கு மாகாண டிப்போக்கள் மக்கள்மயம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண போக்குவரத்துசபை டிப்போக்கள் அடுத்தமாதம் முதல் படிப்படியாக மக்கள் மயமாக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்மாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில் அப்பாறை, அக்கரைப்பற்று, கல்முனை பஸ் டிப்போக்கள் மக்கள்மயப்படுத்தப்பட உள்ளன. மட்டக்களப்பு, வாழைச்சேனை, மூதூர், திருக்கோணமலை பஸ்டிப்போக்களும் மக்கள் மயப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெறும் வாராந்தக்கருத்தரங்குநாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வார கருத்தரங்கு அமர்வில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் ''எனது கலை இலக்கிய அனுபவங்கள்'' எனும் பொருளில் கருத்துரை ஆற்றுவார்.

## சட்டங்கள் ஏட்டில்தான்; அமுலில் இருப்பதில்லை

-- அமைச்சர் செல்லச்சாமி

(கொழும்பு)

தொழிலாளர் நலன்புரிச் சட்டமாக இருந்தாலும் சரி, அரசியல் சாசனமாக இருந்தாலும் சரி, பொது சட்டமாக இருந்தாலும் சரி அவற்றை மிக அழகாக எழுதி புத்தகவடிவில் அச்சிட்டு வைத்திருக்கிறார்களே தவிர நடைமுறைப் படுத்துவதில்லை.

இவ்வாறு கொழும்பு தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் நிறைவு விழாவில் விசேட விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய எம்.எஸ். செல்லச்சாமி குறிப்பிட்டார்.

## இந்திய தொழிலதிபர்கள்

# மாவீரரின் கனவை நிறைவேற்ற மக்கள் அணிதிரள வேண்டும்

-- அரசண்ணா

(வடமராட்சி)

''தமிழினத்தின் தேசியத்தை பாதுகாத்து நின்றவர்கள் மாவீரர்கள். மாவீரர்களின் தியாகத்தினால்தான், எமது தேசியக் கொடியினை எமது பிரதேசத்தில் உயர்த்தியுள்ளோம். தேசியப்படையை உருவாக்கியுள்ளோம், காவல் துறையை அமைத்துள்ளோம், எல்லா வகையிலும் தேசியம், தேசியம் என்றபெருமை நிலையைப் பெற்றுநிற்கின்றோம்.''

வடமராட்சியில் 'தை' மாதத்தில் வீரச்சாவைச் சந்தித்த பதினைந்து மாவீரர்களின் நினைவாக, பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, வடமராட்சியில் தை மாதத்தில் வீரச்சாவை எய்திய பதினைந்து மாவீரர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் 1984-ம் ஆண்டு தொடக்கம் 1991ஆம் ஆண்டு வரையுள்ள காலகட்டத்தில் வீரச்சாவை சந்தித்துள்ளார்கள். இந்த மாவீரர்கள் கண்ட இலட்சியக் கனவை நிறைவேற்ற அனைத்து மக்களும் அணிதிரளவேண்டிய காலகட்டம் இதுவாகும் என்றார்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. வசந்தன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

இறுதியாக வடமராட்சி கலைபண்பாட்டுக் கழகத்தினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன (36)

## வடமராட்சி கிழக்கில் மலேரியா பரவுகிறது

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மலேரியாக் காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருகின்றது.

அதேவேளை இப்பகுதியில் உள்ள மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில், இந்நோய்குத்தேவையான 'குளோறோகுயூன்' வில்லை இல்லை எனப்புகார் செய்யப்படுகின்றது.

நாளாந்தம் அனேகர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள் (36)

## முழு அகதிகளும் திரும்ப இரண்டு வருடமாகுமாம்

(சென்னை)

தமிழகத்திலிருந்து முழு அகதிகளையும் திருப்பி அனுப்புவதற்கு இரண்டு ஆண்டுகள் எடுக்கும் என இந்தியாவின் தினசரியான 'இந்து'ப் பத்திரிகை அறிவித்துள்ளது.

தமிழகத்திலிருந்து திருக்கோணமலைக்கு கப்பல் மூலம் 650 பேரைக் கொண்ட குழுக்களாக அகதிகள் அனுப்பப்படுகின்றனர் என்றும், ஆகவே இரண்டு லட்சம் அகதிகளையும் அனுப்ப இரண்டு ஆண்டுகள் எடுக்கும் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இதனால் இருபது அல்லது முப்பது மீன்பிடி வள்ளங்களில் ராமேஸ்வரத்திலிருந்து இருநூறு, முதல் முந்நூறு அகதிகளைக் கொண்ட குழுக்களாக அவர்களை திருப்பி அனுப்புவது குறித்து தமிழகத்தில் அதிகாரிகள் யோசனை செய்கின்றனர் என்றும் இந்து தெரிவித்துள்ளது.


## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் பூட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் நிறைய இருக்கிறார்கள். திருமணம் முடிவுறுமட்டும் நின்று உதவும் ஓரே ஸ்தாபனம் மங்கல ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். (2164)

## மாணவருக்குள் முரண்பாடு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியை எந்தப் பயிற்சிக் கலாசாலையில் தொடங்குவது என்பது குறித்து பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளது.

இது தொடர்பாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மாணவர்களாலும், பலாலி ஆசிரிய பயிற்சி கலாசாலை மாணவர்களாலும் தனித்தனியே அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகளில் ஒவ்வொரு தரப்பினரும் வர்த்தகப்பாட நெறி தமது கலாசாலையிலேயே நடாத்தப்படல் வேண்டுமென்று அபிப்பிராயம்வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக எழுந்துள்ள வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் எந்தப்பயிற்சிநெறி எந்தக் கலாசாலையில் நடாத்தப்பட வேண்டும் என்பதும், எத்தனை ஆசிரிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதும் கொழும்பிலுள்ள கல்வி அமைச்சே முடிவு செய்ய வேண்டிய விவகாரம் எனச் சிலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.


விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில்

### உயிர்த்த மனிதரின் கூத்து

(நாடகம்)

இடம்:- யாழ் / பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கம்
காலம்:- 01-02-1992 சனிக்கிழமை
(இன்று) பி.ப 3.30 மணி

அன்பளிப்பு 10/-

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

நன்றி

விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்
தலைமைச் செயலகம்
தமிழீழம்

(சி/3872)


## பொதுக்கூட்டம்

[வடமராட்சி கிழக்கு]

வடமராட்சி உடல் ஊன முற்றோர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 4ம் திகதி (04-02-92) அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரசுசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள். [36]

## 10 ஆவது ஆண்டு நிறைவு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின்பத்தாவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8 30 மணிக்கு யாழ். கில்னர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.


### விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் - யாழ்ப்பாணம்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஓரே நிறுவனம்)

O/L

❋ மாலை நேர வகுப்புக்கள்
(மாலை 3மணி முதல் 6மணி வரை)

❋ பகல் நேர வகுப்புக்கள்
(காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)

❋ சனி, ஞாயிறு வகுப்புக்கள்
(காலை 8 மணி முதல் பி. ப. 2 மணி வரை)

புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 1 - 2 - 92

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த போதனை.

★ கடமை, கட்டுப்பாடுடன் நடாத்தப்படும்.

(சி-3863)


## இலங்கையில் நாட்டம்

(கொழும்பு)

டாட்டா, பின்லேஸ், பிர்லா, தோமஸ் அன் கம்பனி, புரூக்பொன்ட் முருகப்பா குரூப் போன்ற இந்தியாவின் பிரபல தொழில் அதிபர்களும், பிரபல கம்பனிகளும் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்க விருப்பம் தெரிவித்துள்ளன.

இலங்கை தேயிலைத்தோட்டங்களைத் தனியார் மயமாக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அசாமின் தேயிலைத் தோட்டங்களின் நிர்வகிப்பில் உள்ள சிக்கலையும் கருத்திற்கொண்டு இந்திய நிறுவனங்களும், தொழிலதிபர்களும் இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் ஆர்வம் செலுத்துவதாகத் தெரியவருகிறது.

### அரச வங்கிகளை

## கம்பனியாக்கும்திட்டத்திற்கு ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

மக்கள் வங்கியையும், இலங்கை வங்கியையும் கம்பனிகளாக மாற்றுவதற்காக நடைபெறும் பேச்சுவார்த்தைகளை இந்த வங்கிகளின் ஊழியர்கள் கண்டித்துள்ளனர்.

தேசிய நலன்களுக்கு எதிரான இந் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும்படி கோரியுள்ள வங்கி ஊழியர்களின் தொழிற் சங்கம் தனது அறிக்கையில் மேலும், வர்த்தகமயமாக்குதல் என்ற போர்வையில் கம்பனிகளாக மாற்றுவதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது அத்துடன் தம்மைச் சேவையில் அமர்த்தும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளில் அல்லது வங்கிகளின் அரசுடைமை முறையில் செய்யப்படும் மாற்றங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் தெரிவித்துள்ளது.

### எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

## நெடுந்தீவு மக்களுக்கு ஒழுங்குகள் செய்யவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ள அமைய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் நெடுந்தீவு பகுதி மக்கள் இருப்பதாகவும் இவர்களுக்கேற்ற ஒழுங்குகளைமேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் இப் பரீட்சார்த்திகள் சார்பில் நெடுந்தீவு முன்னேற்றச் சங்கம் அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது தெரிந்ததே. இதற்கு பல நெடுந்தீவு பரீட்சார்த்திகளும் விண்ணப்பித்திருந்தனர். இராணுவ நடவடிக்கைகளாலும் போக்குவரத்து வசதி இன்மையாலும் இவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காஷ்மீர் மக்களுக்கு பாக். தொடர்ந்து உதவும்

(கொழும்பு)

காஷ்மீர் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்காகப் பாகிஸ்தான் ராஜதந்திர, அரசியல் மற்றும் ஆதரவுகளைத் தொடர்ந்தும் வழங்கும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகம் இது பற்றி விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலிருந்து மேலும் தெரிய வருவதாவது: ஐ. நா. தீர்மானத்துக் கமைவாக காஷ்மீர் மக்களின் தற்பாதுகாப்பு உரிமை பேணப்படவேண்டும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் தெரிவித்துள்ளார்.


தல் வேண்டும்.

மருந்துக் கடைகள், தேநீர்க் கடைகள், பழக் கடைகள், பத்திரிகைக் கடைகள் மோட்டார் லாறிகள் ரயர் ஒட்டும் கடைகள், துவிச்சக்கரவண்டிகள் திருத்தும் கடைகள், மண்ணெண்ணைக் கடைகள், மரக்கறிக் கடைகள் ஆகியன விதி விலக்காகும்.

மேற்படி நிலையங்கள் இந்த நாட்களில் அந்தந்தப் பொருட்களை மட்டும் விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் யாவரும் நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் அங்கத்தினர்களாகக் கருதப் படுவார்கள்.

சகல வர்த்தகர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

K. B. சிவா — செயலாளர்
என்.கே.குலசிங்கம் — தலைவர்

(2166)



### நினைவு கூருகின்றோம்

1992-02-01

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் பள்ளமடுவில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

2ஆம் லெப். பீரிஸ்
(மனுவல் ஞானப்பிரகாசம் - கர்த்தர் கோவிலடி, பரப்புக்கடந்தான்)

ஜெராட் (காங்கேசு இராசலிங்கம் - பெரியகடை மன்னார்)

1987ஆம் ஆண்டு தும்பன்கேணியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

2ஆம் லெப். செந்தூரன் (சிவகுரு சத்தியநாதன் - பழுகாமம் மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு வவுணதீவில் சிறிலங்காப்படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

எஸ். பி. (சாமியப்பு றேமசிவா - காரைதீவு-2)

1989ஆம் ஆண்டு பண்டிவிரிச்சானில் மிதிவெடியில் சிக்கி காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

குணா (செல்லையா ரவீந்திரராஜா - செட்டிகுளம், வவுனியா)

அக்கராயன் குளத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சுளிபுரம்வாசி, மற்றும் 4 தமிழ் விவசாயிகள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3871)

## சிந்தனைக்கு

துவேஷத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் கருத்துக்கள், எப்பொழுதுமே அதிக பலாத்காரத்தில் ஆதரவு தேடும்.

- ஜெஃப்ரி பிரபு

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 01-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## உலகை ஏமாற்ற ஒரு விசாரணை

கொக்கட்டிச் சோலையில் கடந்த வருடம் யூன் மாதம் தமிழ் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டமைக்கும், உடைமைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமைக்கும் சிறிலங்கா இராணுவமே காரணம் என இது தொடர்பாக விசாரணை நடத்திய ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது. இவ் ஆணைக்குழு ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட படுகொலை செய்யப்பட்ட 67 பேர்களின் பெயர்ப்பட்டியலையும் வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா இராணுவம் இதுவரை பல்லாயிரக் கணக்கான தமிழர்களைப் படுகொலை செய்துள்ளது. ஆனால், இதுதான் சிறிலங்கா அரசாங்கம் விசாரணைக்கு என எடுத்துக் கொண்ட முதலாவது சம்பவமாகும். இவ்விசாரணையும், முழுமையான தொன்றாக இல்லை. இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு சடலங்களாக மீட்கப்பட்டவர்களே ஆணைக்குழு குறிப்பிட்டுள்ள 67 பேரும் ஆகும். இதில் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டவர்களோ, அன்றி புதைக்கப்பட்டவர்களோ அடங்கவில்லை. அவர்களைப் பற்றி விசாரணைக்குழு அறிக்கையும் திரட்டவில்லை. அதாவது படுகொலை விசாரணைகளில் இருந்து தப்புவதற்குச் சில வழிகளையும் விசாரணை ஆணைக்குழு இராணுவத்தினருக்குக் காட்டி உள்ளது. சடலங்களை வெளியில் விட்டு வைக்காதீர்கள் என்பதே அது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலை தொடர்பாக விசாரணை ஆணைக்குழு விடுத்த இடைக்கால அறிக்கையானது படுகொலைக்கு இராணுவத்தினரே

---

### பிரச்சினை கைமாற்றம்

# சர்வகட்சிகளிடமிருந்து தெரிவுக் குழுவிடம் தீர்விற்காகவல்ல; இழுத்தடிப்பிற்காக

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நாம் தொடர்ந்து அங்கம் வகிப்பது மற்றவர்களின் தலையிடியை நாம் வலியப் போய் ஏற்றது போலாகும் என்று கூறினார் சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் றிச்சார்ட் பத்திரான. இவர் சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடாவாகப் பாராளுமன்றத்தில் பணியாற்றுபவர். ஆகவே அவரின் இத்தகைய கூற்று பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காணக் கூடும் என்று கற்பனை செய்த எவருக்கும் ஆச்சரியத்தை அளித்திருக்கும்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற குழுக்கூட்டம் இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆயுள் குறித்து கேள்வியை எழுப்பியுள்ளது. சுதந்திரக்கட்சிக்குள் இருக்கும் தீவிர சிங்கள இனவெறியர்களான ஜினதாஸ நியதபால மற்றும் எஸ். எல். குணசேகரா போன்றோரின் குரல் இச்கூட்டத்தில் உரத்து ஒலித்தது அமைச்சர் தொண்டமான் முன் வைத்த யோசனைகளை எதிர்த்தே தீரவேண்டும் என்று அடம் பிடிக்கும் இவர்கள் 'ஹெல உறுமய' என்ற பெயரில் ஒரு புதிய அணியையும் தோற்றுவித்துள்ளனர். இக்குழுவின் முதலாவது கூட்டம் ஜனவரி 21 ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றபோது சுதந்திரக்கட்சி எம். பிக்களில் இருபத்தைந்து பேர் கலந்துகொண்டுள்ளனர். மேலும் பதினைந்துபேர் ஆதரவு தெரிவிப்பதாக கோடி காட்டியுள்ளனர்.

இந்த நிலையிலேயே பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சுதந்திரக்கட்சி தொடர்ந்து பங்கு வகிப்பது அர்த்தமுடையதா என்ற கேள்வியை சுதந்திரக்கட்சி பாராளுமன்றக் குழு எழுப்பியுள்ளது அமைச்சர் தொண்டமான் முன் வைத்துள்ள யோசனைகள் பகிரங்கப்படுத்தப்பட்டு விட்டமையினையும், அமைச்சர் ரணில் விசகிரமசிங்க சுதந்திரக் கட்சிதான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தடையாக இருப்பதாக பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டியிருப்பதையும் சுட்டிக் காட்டி சுதந்திரக்கட்சி தெரிவுக்குழுவை புறக்கணிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இதனிடையே கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சுதந்திரக் கட்சி எம். பிக்களான குணவர்த்தனா (திருக்கோணமலை), தேவாரப்பெருமா (அம்பாறை) ஆகியோரை தெரிவுக் குழுவிற்கு கட்சித் தலைமை சிபாரிசு செய்யாமையும் இங்கு விமர்சனத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. இந்தக் கிழக்கு மாகாண எம். பிக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவது என்ற போர்வையில் தெரிவுக் குழுவிலிருந்து நைசாக வெளியேறும் யோசனையை முன் வைத்த றிச்சாட் பத்திரன (கட்சியின் பிரதம அமைப்பாளர்) தர்ம சிறி சேனநாயக்க (கட்சியின் பதில் செயலாளர்) ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரித்தனர்.

எனினும் கூட்டத்திற்கு தலைமை வகித்த அநுரா பண்டாரநாயக்கா நிலைமையைச் சமாளிக்கவோ, என்னவோ சபாநாயகருடன் பேசி தெரிவுக்குழுவில் சுதந்திரக் கட்சிக்குமேலும் இரு ஆசனங்களை ஒதுக்கும்படி கோரப் போவதாகவும், அவ் ஆசனங்

**இனியவன்**

களை கிழக்குமாகாண சுதந்திரக்கட்சி எம். பிக்களுக்கு ஒதுக்கப் போவதாகவும் குறிப்பிட்டார். ஏற்கனவே திருமதி சிறிமாவோபண்டாரநாயக்காவிற்குப் பின் கட்சித் தலைமைப் பதவி யாருக்கென்பது குறித்துபெரும் இழுபறியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களால் மேலும் குழம்பிப்போயுள்ளது.

இதில்இன்னுமொருவிடயம் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியுள்ளது அதாவது இன பிரச்சினைத்தீர்வுக்காகபாராளுமன்ற தெரிவுக்குழு வொன்றைஅமைக்கவேண்டும் என்று பாராளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையைமுன் மொழிந்தவரும், தற்போது பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக இருப்பவருமான மங்களமுனசிங்கா இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். ஆனால் எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் அவர் மௌனமே சாதித்தார். அவரது மௌனம் அர்த்தம் பொதிந்தது என்று அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த மௌனம்தான் பாராளுமன்றத்தெரிவுக்குழுவின்ஆயுள்பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது எனவும் கொள்ளப்படலாம்.

இனப்பிரச்சினைக்கு தனது தீர்வுத் திட்டம் என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சியோ, சிறிலங்கா அரசாங்கமோ முன் மொழியாத நிலையில், சிறிலங்கா அரசும், பிரேமதாசாவும் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சிகளின் அங்கீகாரத்தைப் பெறும் தந்திரோபாயமே இந்தத் தெரிவுக் குழு என்று தனது தரப்பு நியாயத்தை மேலும் விளக்கியுள்ளார் றிச்சாட் பத்திரான இதன் மூலம் தேசியமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பொன்றிற்கு தீர்வு காணும் பொறுப்பிலிருந்து றிச்சாட் பத்திரான மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நழுவிக் கொள்ளப் பார்க்கின்றது என்பது புலனாகின்றது.

இதேவேளை தொண்டமான் முன் வைத்த யோசனைகள் தொடர்பாக எழுந்துள்ள பேரின வாதக்கூச்சல் கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் வியாபாரிகளையும், ஏனைய சிறுபான்மை இனப்பிரதிநிதிகளையும் கிலி கொள்ள வைத்துள்ளதும் தெரியவருகின்றது தொண்டமான் முன் வைத்த யோசனைகளில் புதிதாக எதுவுமில்லையே என ஆதங்கப் படும் இவர்கள் இந்தப் பேரினவாதக் கூச்சல்கள் எழுப்பியமைக்கு காரணம் அவர் ஒரு தமிழர் என்பதாலா? அல்லது தேசிய முக்கியத்துவமான ஒரு பிரச்சினை தொடர்பாகதனது கருத்தை பகிரங்கமாக முன் வைத்தமையினாலா? அல்லது புலிகளுடன் பேச அவருக்குச் சந்தர்ப்பமும், விருப்பமும் இருந்தமையினாலா? எனக் கேள்வி எழுப்பி தமக்குள் குமைந்து கொள்கின்றனர்.

இந்த நிலைமைகளின் அடிப்படையில் பரிசீலிக்கும் எவரும் பெரும் ஆரவார விளம்பரங்களோடு கூட்டப்பட்டதும் மூன்றாண்டுகளாக ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருப்பதுமான அனைத்து அரசியல் கட்சிகளின் மாநாட்டை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடத்தைகளோடு ஒப்பிட்டுப்பார்ப்பதை தவிர்க்க முடியாது. தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண சிங்களப் பேரினவாதம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை என்பதற்கு கிடைக்கும் ஆணித்தரமான சான்றுகளில் மேலும் ஒன்றாகவே பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பயணமும் அமையும் எனலாம்,

இதனை மேலும் வலியுறுத்துவது போலவே வண மடிகே பஞ்ஞ சீகதேரோ கருத்து வெளியிட்டுள்ளார். அதாவது தமிழர்களின் தாயகப்பகுதி என்ற ஒன்று இலங்கையில் எப்பாகத்திலும் இருக்கக் கூடாது என குறிப்பிட்டுள்ளமை அமைகின்றது.

---

## மேற்கு உதவிட்டால்

## மகாராணிக்கும் வரு. வரி

கையானது படுகொலைக்கு இராணுவத்தினரே பொறுப்பு. ஆனால், அது இராணுவத்தால் திட்டமிட்டு பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை அல்ல என்பதைத் தெரிவிப்பதில் அக்கறையாக உள்ளது. அதாவது படுகொலை திட்டமிடப்பட்டதல்ல இராணுவத்தினர் உணர்ச்சிவசப்பட்டதினால் ஏற்பட்டது என வற்புறுத்துவதில் அக்கறையாகவுள்ளது.

முன்னரும் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பல்வேறு படுகொலைகளில் சில படுகொலைகள், ஒருசில அத்துமீறல்கள் தொடர்பாக தவிர்க்க முடியாமல் விளக்கம் அளிக்கும் நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்ட போது கொலைகளை ஏற்றுக் கொண்டு ஆனால், இராணுவத்தினருக்கு பாதுகாப்பு அளிக்கும் அடுத்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டே வந்தது. 1985 ஆம் ஆண்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் அப்பாவி மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு சித்த சுவாதீனமற்ற சிப்பாயால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என அரசாங்கம் கூறியது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அணிவகுப்பு மரியாதையின் போது தாக்கப்பட்டதற்கு சூரிய ஒளியின் தாக்கம் காரணமாக ஏற்பட்ட தடுமாற்றம் என விளக்கம் கூறியது. தற்பொழுது கொக்கட்டிச்சோலைப் படுகொலைக்கு உணர்ச்சிவசப்பட்ட நிலை என விளக்கம் கொடுக்கின்றது. அதாவது சட்டத்தின் பிடியில் இருந்து மீள்வதற்கு வழிகள் விசாரணையிலேயே காட்டப்படுகின்றன.

ஆனால், இவ்வாறான காரணங்களை, ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் எவ்வாறு கண்டுபிடிக்கின்றார்கள் என்பதே ஆச்சரியமாக இருக்கின்றது லெப்டினன்ட் தரத்திலுள்ள ஒரு இராணுவ அதிகாரியே ஆணைக்குழுவின்முன் சாட்சியமளித்தார். அவர் சத்தியப் பிரமாணம் செய்யாமல் சாட்சியமளித்தார் என்பதினால், அவரது சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் விசாரணைக்குழு எவ்வாறு இராணுவம் படுகொலையைத் திட்டமிட்டு மேற்கொள்ளவில்லை உணர்ச்சிவசப்பட்டே செய்தது என்ற முடிவிற்கு வந்தது. இதனை ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தது யார்? கிழக்கில், திட்டமிட்டு தமிழரைப் படுகொலை செய்தும் விரட்டியும் வரும் சிறிலங்கா இராணுவம் இப்படுகொலையைத் திட்டமிட்டுச் செய்யவில்லை, அல்லது கண்ணிவெடிச் சம்பவத்தை ஒரு சாட்டாக வைத்துச் செய்யவில்லை என்பதை இவ்விசாரணைக் குழுவால் எவ்வாறு கூறிவிட முடியும்?

சிறிலங்கா அரசாங்கம் கொக்கட்டிச்சோலை படுகொலைகள் சம்பந்தமாக ஒரு விசாரணைக்குழு அமைத்ததும் அதன் அறிக்கையை அவசரப்பட்டு வெளியிடுவதும், ஏன் என்பது சகலருக்கும் தெரிந்த விடயம். எதிர்வரும் ஏழாம் திகதி பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து போதிய நிதி உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையே இதுவாகும். மனித உரிமைகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளே அதற்கு வழங்கப்படும் உதவியைத் தீர்மானிக்கும் என உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்ததன் எதிரொலியே இவ் விசாரணை அறிக்கை அவசரப்பட்டு வெளியிட்டமைக்கான காரணமாகும்.

இவ்விசாரணைக்குழுவின் அறிக்கையையும் சிறிலங்கா அரசாங்கம் கூறும் வாக்குறுதிகளையும் நம்பி உதவி வழங்கும் நாடுகள் சிறிலங்காவிற்கான உதவியை போதியளவில் வழங்கலாம். ஆனால், விசாரணைக் குழுவின் அறிக்கை படுகொலை புரிந்தவர்கள் தப்பித்துக் கொள்வதற்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுத்திருப்பதினால் எதிர்காலத்தில் இனப்படுகொலைகள் இடம் பெறாமலும் மனித உரிமைகள் மீறப்படாமலும் இவ்விசாரணை தடுத்துவிடும் என்று எண்ணுவது தப்புக்கணக்காகவே இருக்கும்.

# மேற்கு உதவிவிட்டால் புதிய ஆயுதப் போட்டி

## யெல்சின் எச்சரிக்கை

(லண்டன்)

ரஷ்யாவில் சீர்குலைந்து வரும் பொருளாதாரத்தைக் காப்பாற்ற மேற்கு நாடுகள் முன்வராவிடில் புதிய ஆயுதப் போட்டி ஒன்றைத் தொடக்க நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி போரீஸ் யெல்சின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே யெல்சின் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

முன்னதாக கடந்த செவ்வாய்க் கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பெரும் ஆயுதக் குறைப்புப் பற்றிய யோசனையை அறிவித்ததை அடுத்து யெல்சின் இவ்வாறு எச்சரித்துள்ளார் என்று பி.பி.ஸி. கருத்துத் தெரிவித்துள்ளது.

சீர்திருத்த நடவடிக்கைகள் தோல்வியுற்று பழமைவாதிக் கட்சி ரஷ்யாவில் ஆட்சிக்கு வந்துவிட்டால் அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அணு சக்தி வல்லரசுகளில் மீண்டும் ஆயுதப்போட்டி துவங்கிவிடும் என்றும் யெல்சின் தெரிவித்தார்.

# ரஷ்ய அதிபர் யெல்சினின் கோரிக்கை ஏற்கமுடியாதது

## - ஜோன் மேயர்

(லண்டன்)

ரஷ்யாவின் அணு ஆயுதங்களை அழிப்பதற்கு பிரிட்டன் உதவும் அதேசமயம் உலக ரீதியில் ஆயுதப்போட்டி தவிர்க்கப்படவேண்டும் என்ற ரஷ்ய அதிபர் யெல்சினின் கோரிக்கை ஏற்கப்படமுடியாதது எனப் பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் லண்டனில் பிரிட்டன் பிரதமரும் ரஷ்சிய அதிபரும் ரஷ்சியாவிற்கு பொருளாதார இராணுவரீதியில் உதவும் உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடையே பேசுகையில் பிரிட்டன் பிரதமர் ரஷ்ய அதிபரின் கோரிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

## ஈரான் மறுப்பு

(தெகிரான்)

முன்னாள் சோவியத் யூனியனின் அணுவாயுதத்துறை நிபுணர்களை பணிக்கு அமர்த்தியிருப்பதாகக் கூறப்படுவதை ஈரான் மறுத்துள்ளது

மேற்குலகப் பத்திரிகைகள் வெளியிட்ட இத்தகவல் முற்றிலும் ஆதாரமற்றது என்று தெகிரானில் நேற்று வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# மகாராணிக்கும் வரு. வரி

## பிரிட்டனில் புதிய இயக்கம்

(லண்டன்)

மகாராணி வருமான வரி செலுத்த வேண்டும் எனக் கோரும் புதியஇயக்கமொன்று பிரிட்டனில் ஆரம்பித்துள்ளது.

அடுத்த மாதம் சிம்மாசனம் ஏறிய நாற்பதாவது ஆண்டு நிறைவைக்கொண்டாடவிருக்கும் எலிசபெத் மகாராணியாருக்கு, ஆயிரத்து முந்நூறு கோடி டாலர் பெறுமானமுடைய சொத்துக்கள் இருப்பதாக ஒரு மதிப்பீடு தெரிவித்துள்ளது. இது இலங்கை நாணயப்படி பார்த்தால் 55,250 கோடி ரூபாவாகும்.

# திறந்த பொ. கொள்கையில் சீனா அக்கறை

## — லீ பெங்

(சூரிச்)

சீனா திறந்த பொருளாதாரக் கொள்கையில் அக்கறை காண்பித்து வருவதாக சீனப் பிரதமர் லீ பெங் தெரிவித்தார்

சுவிட்சர்லாந்தில் சூரிச் நகரில் இடம் பெற்றுவரும் உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்த கூட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில், சந்தை அடிப்படையிலான பொருளாதார முறையைநோக்கி செல்வதில்சீனா பெற்றுள்ள நன்மைகளை லீபெங் விளக்கிக் கூறினார் அவர் தமதுரையில் சீனாவின் அரசியல் ஸ்திரப்பாடு பற்றி வலியுறுத்தியபோதும், அரசியல் சுதந்திரம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# அணு விஞ்ஞானிகளுக்கு அமெ. வேலைவாய்ப்பு

(வாஷிங்டன்)

முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச்சேர்ந்த 2000 அணு விஞ்ஞானிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது அபு நாடுகள் இவர்களைப் பயன்படுத்தி அணு குண்டுகளை தயாரித்துவிடலாம் என அமெரிக்கா அஞ்சுகிறது. இதனைத் தடுப்பதற்காக அமெரிக்கா சோவியத் விஞ்ஞானிகளை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடிவு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது

# இஸ்ரேலுடன் இந்தியா உறவு

## ஜனதாதள் கண்டனம் பாரதீய ஜனதா வரவேற்பு

(டில்லி)

இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது என்று இந்திய அரசுமேற்கொண்டுள்ள முடிவு இத்தருணத்தில் தார்மீக ரீதியிலும் அரசியல் ரீதிலும் சரியான முடிவு அல்ல என்று ஜனதாதள் பாராளு மன்ற உறுப்பினரான செய்யது சுகாப்தீன் கூறியுள்ளார்.

இதேவேளை இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சி பீ. ஐ. கட்சியின் தேசிய செயலாளர் சத்துரானந் மிஸ்ரா அவசரப்பட்ட ஒரு முடிவு என்று வர்ணித்துள்ளார்.

எனினும் பாரதீய கட்சியின் செயலாளரும், முன்னாள் வெளியுறவு அமைச்சருமான அடல் வாஜ்பாய் இஸ்ரேலுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் இந்திய அரசின் முடிவைவரவேற்றதுடன், மேற்காசியப் பிரச்சினையில் இந்தியா பங்காற்ற இது வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

# இமெல்டா மார்க்கோஸ் மீண்டும் கைது

(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதி மார்க்கோசின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் சட்ட விரோதமாக வெளிநாட்டு வங்கிகளில் பணம் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே அவர்மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகள் மீது கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மொஸ்கோ பேச்சில் இந்தியா பங்குகொள்ள வேண்டும்

## - அரபாத்

(டில்லி)

மொஸ்கோவில் நடைபெறுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ள மத்தியகிழக்கு சமாதானமாநாட்டில் இந்தியாவும் பங்குபற்ற வேண்டுமென பாலஸ்தீன விடுதலைஇயக்கத் தலைவர் யாசீர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் இந்திய விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி வந்திருந்த யாசீர் அரபாத் இந்திய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோரை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியமை தெரிந்ததே.

# கலை இலக்கிய கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று (1 2.92) சனிக்கிழமை வடமராட்சி தென்மராட்சி வலிகாமம் ஆகிய பகுதிகளில் கலை, இலக்கியத் துறை சார்ந்த கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

வலிகாமம் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் காலை 9 00 மணிக்கு திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் ''எமது போராட்டத்தில் கலை, இலக்கியங்கள் ஆற்றவேண்டிய பங்கு'' என்ற பொருளில் கருத்துரை ஆற்ற உள்ளார்.

தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பி. பகல் 2. 30 மணிக்கு திரு. ஐ. சாந்தன் அவர்கள் ''ஒரு இலக்கியவாதியின் இன உணர்வுகள்'' எனும் பொருளில் கருத்துரையாற்றுவார்.

வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு க. சி. குலரத்தினம் அவர்கள் ''அறுபது ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்'' எனும் பொருளில் உரையாற்றுவார்.

கடற்புலிகள் பிரிவில் குருநகரில் பிற்பகல் 3 00 மணிக்கு திரு. எரி. பொன்னுத்துரை அவர்கள் ''கிராமியக்கலைகள்'' (நாடகம்) எனும் பொருளில் கருத்துரையாற்றுவார்.

மேற்படி கருத்தரங்க நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது.

ஈழநாதம்

# லிபியாமீது பொருளா. தடை பிரிட்டன் கோரிக்கை

(நியூயோர்க்)

இரண்டு விமானங்களை வெடிவைத்து தகர்த்த சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட லிபியா நாட்டவர்கள் இருவரை விசாரிக்க அனுப்புமாறு லிபியாவை நெருக்குதல் செய்ய ஐ. நா. பாதுகாப்புச் சபை அதன் மீது பொருளாதார தடைகள் விதிக்கவேண்டுமென்று பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன் மேயர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் செய்தியாளர்கள் மத்தியில்பேசியஜோன் மேயர் பெப்ரவரி மாத இறுதிக்குள் இத்தகைய தடை விதிக்கும் தீர்மானத்தை பாதுகாப்புச் சபை நிறைவேற்றும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

இதே நேரம் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின்படி நடக்குமாறு கேர்ணல் கடாபியை வற்புறுத்த திரிப்போலிக்கு ஒரு தூதுவரை ஐ நா.வின் தலைமைச் செயலாளர் பூட்டோர்ஸ் சலி அனுப்பியுள்ளார்.

## ஜோர்ஜ் ஏ. கபாஸ் பாரிஸில் சிகிச்சை

பாலஸ்தீன விடுதலை அமைப்புகளில் ஒன்றான பாலஸ்தீன விடுதலைக்கான வெகுஜன முன்னணி (PFLP) அமைப்பின் தலைவரான ஜோர்ஜ் ஏ. கபாஸ் மாரடைப்பினால் பாதிக்கப்பட்டுள்ளார். பிரான்ஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடிப் பெற்றுக் கொண்ட அவர் தற்போது பாரிஸ் மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார். போக்குவரத்து, வைத்திய செலவு போன்றவற்றிக்கான கட்டணங்களை ஜோர்ஜ் ஏ.கபாஸ் செலுத்தி வருகின்றபோதிலும் பாரிசுக்கு அவர் விஜயம் செய்துள்ளமை அரசியலரங்கில் சர்ச்சை ஏற்படுத்தியிருப்பதாக தெரியவருகின்றது. பிரான்சு அரசின் அனுமதியுடனேயே ஜோர்ஜ் கபாஸ் பாரிசுக்கு அழைத்து வரப்பட்டதாகக் கூறியுள்ள பிரான்சு செஞ்லுவைச் சங்கக்கிளைத் தலைவர் இந்தச்சர்சைகளால் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்

இசுரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட்லெவி பிரான்சு அரசின் முடிவுக்கு பகிரங்கமான முறையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## ஸ்தாபகர் தின விழா

((சாவகச்சேரி)

சாவகச்சேரிஇந்துக் கல்லூரியின் ஸ்தாபகர், பெரியார் வை. தாமோதரம்பிள்ளை நினைவு தினவிழா கடந்த இருபத்தேழாம்திகதி மேற்படி கல்லூரியில் அதிபர் திரு. க. சந்திரசேகரம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் ஸ்தாபகரின் திருவுருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார். யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. சத்தியசீலன் அவர்கள் நினைவுப்பேருரை வழங்கினார். ஸ்தாபகரின் உருவை திரையில் வரைந்த ஓவியர் திரு இராசையா அவர்கள் இவ் விழாவில் பொன்

## மாறும் சூழலுக்கேற்பவே இஸ்ரேலுடன் உறவு கொண்டோம்

- நரசிம்மராவ்

(நியூயோர்க்)

மேற்காசியாவின்மாறிவரும் சூழலைக் கொண்டே இஸ்ரேலுடன் ராஜீயத் துறையிலான

என்றும் இந்தியா மனித உரிமைகளை மதித்து நடந்து வந்துள்ளது என்றும் குறிப்பிட்

## குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை

(வடமராட்சிகிழக்கு)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக நடைமுறைக்கு வரவிருக்கும் குடும்ப அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் செயலகத்தினால் அறிமுகம் செய்யப்படவிருக்கும் இப்புதிய அட்டையினை வழங்குவதற்காக கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் உள்ள குடும்பங்களின் பெயர் விபரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன(36

## தனியார் மயமாக்கலை கண்டித்து பொதுக்கூட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டங்கள், வங்கிகள், புகையிரதசேவை, கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றைத் தனியார் மயமாக்குவதைக் கண்டித்து கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று முன் தினம் பொதுக்கூட்டமொன்று நடைபெற்றது.

பெருந்தோட்ட தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் இணைடபாளரான கலாநிதி சுனில் ரட்ணாயக்க தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணா, வாசுதேவநாணயக்கார, காமினிதிசாநாயக்கா உட்பட பலர் உரையாற்றினர்

## கிளிநொச்சி மாவட்டம்: 75 பாடசாலை ஆசிரியர் கஷ்டபிரதேச படி பெறுவர்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி மாவட்டத்தில் 75 பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்கள் கஷ்டப் பிரதேச, மிகவும் கஷ்டப் பிரதேச படிகளைப்பெறுவார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எண்பத்தொரு பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் 47 பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டப் பிரதேசத்திற்கு உரியபடியாக அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 15 வீதமும், 28 பாட

பிரதேசப்படியாக, அவர்களது சம்பளத்தில் 10வீதமும் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் இப்படிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை பளை கொத்தணியில் பளை மகா வித்தியாலயத்தைத் தவிர்ந்த ஏனைய 12 பாடசாலைகள்கஷ்டப் பிரதேச, மிகக் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

இவற்றில் ஐந்து பாடசாலை ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டப் பிரதேசப் படியும், ஏழு

## பாதுகாப்புச்சபையில்‘வீட்டோ’; எந்நாட்டிற்கும் இருக்ககூடாது

-இந்தியப் பிரதமர்

(நியூயோர்க்)

ஐ நா.பாதுகாப்புச் சபையில் ஒரு சில நாடுகளுக்கு விசேட அந்தஸ்து இருக்கக் கூடாது என இந்தியப் பிரதமர் பி. வி. நர்சிம்மராவ் தெரிவித்துள்ளார். ஐ. நா. பாதுகாப்புச் சபையின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருக்கும் அவர் செய்தியாளர் மத்தியில் இதனைத் தெரிவித்தார்.

ஐ. நா. பொதுச்சபையின் உறுப்பினர்கள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ள போதிலும் பாதுகாப்புச்சபை விஸ்தரிக்கப்படவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பாதுகாப்புச்சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அணுவாயுதப் பரவலைத் தடுக்கும்அதிகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் வழங்க பிரிட்டன் தெரிவிக்கும் ஆலோசனையை இந்தியா எதிர்க்கும் எனத் தெரிய வருகிறது.

## சிறிலங்கா கடற்படை தளபதி ஜெயலலிதா சந்திப்பு

(சென்னை)

சிறிலங்கா கடற்படை தளபதி வால்டர் பெர்னான்டோ தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தினார் என அறியவருகிறது.

சந்திப்பின் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஐந்துநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள சிறிலங்கா கடற்படை தளபதி, இந்தியாவின் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ராம்தாஸை சந்தித்தது தெரிந்ததே.

## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வேலைகள் தொடரும்

கத்தோலிக்கமதகுருமாரும், இரணவில வாசிகளும் எதிர்த்த போதிலும் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் இரணவில அலை பரப்பு நிலையம் தொடர்பான வேலைகள் தொடரும். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கவாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கிடையிலானது. நாம் இதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். 1983 டிசம்பர் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தப்படி இரணவிலவில் நானூறு ஏக்கர் நிலம் அமெரிக்காவிற்கு குத்தகைக்கு விடப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

## பொது அறிவுத்தேர்வு நீடிக்கப்பட்டுள்ளது

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு பரீட்சைக்கான விண்ணப்பத்திகதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க [6 - 2 - 92] வரும் வியாழக்கிழமை வரை நீடிக்

படமாட்டாதெனவும், மாணவர்கள் குறித்த திகதிக்குள் தங்கள் அதிபர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறும், பாடசாலை மாணவர்களே இத்தேர்வில் பங்கு கொள்ளமுடியும் என

ஓடன் ராஜீயத் துறையிலான உறவுகளை இந்தியா மேற்கொண்டதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற ஐ. நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பாகச் செய்தியாளர்களிடையே பேசிய நரசிம்மராவ் மேலுங் கூறுகையில், எந்த ஒரு நாட்டின் சுய ஆட்சி உரிமையையும் குறைப்பதற்காக மனித உரிமைகள் விடயத்தை பயன்படுத்தக் கூடாது என்றும்-

வெளிநாட்டு உதவியுடன் மனித உரிமைகள் விடயத்தை சம்பந்தப்படுத்தக் கூடாது

துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா தனது குறுகிய கால - நீண்டகால தேசிய நலன்களை கருத்திற் கொண்டே என்றும் செயற்படும் என்று அவர் பேட்டியின் போது தெரிவித்தார்.

## தற்கொலை

(சென்னை)

சென்னையில் யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் எனப் பி. ரி. ஐ அறிவிததுள்ளது.

அருட்சோதி (36 வயது) என்னும் இவரின் சடலம் வாடகைக்கு தங்கி இருந்த வீட்டில் தாழ்ப்பாள் போடப்பட்ட அறைக்குள் கிடக்க பொலிசார் செவ்வாயன்று கண்டெடுத்தனர். அருட்சோதி கடந்த எட்டாண்டுகளுக்கு மேலாக ஈரோஸ் அமைப்புடன் பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

...னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (மு)

...சாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்குகஷ்டப் ...

பாடசாலை ஆசிரியர்களுக்கு கஷ்டப்பிரதேசப்படியும் வழங்கப்படவுள்ளன.

...கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பத்திகதி மேலும் நீடிக்கப் ...

...வர் இயக்கப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## போதனா

அனுப்ப கூடியதாக இருக்கும்.

இக்கழிவகற்றும் நடவடிக்கை யாழ். மாநகர சுகாதார அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. (ச)

# கலைக் கல்லூரியில் கலை வெளிப்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்டங்களின் கலைக் கல்லூரியில் கலை வெளிப்பாட்டு விழா நிகழ்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை (14- 2- 92) கல்லூரி அரங்கத்தில் நடைபெறவுள்ளது

அனைத்து கல்லூரி மாணவர்களினதும் ஓவியக்கண்காட்சி, வயலின் இசை, வாய்ப்பாட்டு, நடனம், இசை நிகழ்ச்சி, (கிற்றார், ஓகன், ஆர்மோனியம், மிருதங்கம்) நாடகம் ஆகியன இடம்பெறவுள்ளன.

மாணவருக்கு காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 2.00 மணிக்கும் பெரியோருக்கு மாலை 7.00 மணிக்கும் காட்சிகள் இடம்பெறும். அன்பளிப்பு மாணவருக்கு ரூபா 5.00 பெரியோருக்கு ரூபா. 10.00

அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

# மைக்கன்றோ ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

மேஜர் ''மைக்கன்றோ'' அவர்களின் ஞாபகார்த்தமாக கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையம் நடாத்தும் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இறுதியாட்டமும் நினைவஞ்சலிக் கூட்டமும் (2 2. 92) பிற்பகல் 2 00 மணிக்கு குமரன் விளையாட்டு மைதானத்தில் (கோண்டாவில் சந்திக்கு அருகாமை) நடைபெறவுள்ளது.

திரு. மகாலிங்கம் மங்கள விளக்கேற்றி வைக்க சி இளம்பரிதி (வி. பு. ம. மு. அரசியல் பொறுப்பாளர்) தேசியக் கொடியேற்ற திரு. செ. செல்வராசா அவர்கள் நிலையக் கொடியேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்

மேஜர் மைக்கன்றோவின் 6 அடி உயரமான திருவுருவப் படமும் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

## மலைநாடு

மலைநாடு புலிகள் இயக்கம் என்றெல்லாம் கூறி சில அரசியல் வாதிகள் அரசியல் லாபம் பெறமுற்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மலை நாட்டில் புலிகள் இயக்கம் செயல்படுகிறது என்று இன்று நேற்றல்ல பல வருடங்களாகவே இவ்வாறு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அப்படியிருந்தால் புலிகள் இயக்கத்தினரைப் பிடிக்க வேண்டியது தானே என்றும்,

தோட்டங்களில் எவரும் அநியாயமாக கைது செய்யப்பட்டால் நாம் நியாயத்திற்காகப் போராடுவோம் என்றும் இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

## முல்லை

ளில் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை மணலாறு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து சரமாரியாக ஏவப்பட்ட ஏவுகணைகள் சிலாவத்தையை அடுத்துள்ள கிராமங்களில் வீழ்ந்து வெடித்துள்ளன. இதனால் பொதுமக்களின் வீடுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

## அதிபர்களின்

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே அதிபர்கள் இவ் விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்டு வருமதியாக உள்ள பணப் பெறுமதியை விரைவாக பெற்றுக் கொள்ள ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரசங்க அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் உட்பட பல அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர். [ச]

## தங்கக்கட்டி

எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை லொறியின் சாரதி தலைமறைவாகியுள்ளதுடன் கிளீனர் மேல் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

# மலையகத்தில் கொள்ளைகள்; தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(ஹற்றன்)

தோட்டப்பகுதிகளுக்குள் கொள்ளையர்கள் சீருடையில் சென்று தொழிலாளர்களிடம் கொள்ளையடிக்கும் சம்பவம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளைப் பகுதியில் ஸ்பிரிங்வெலி தோட்டப்பகுதியில் சீருடைதரித்த வண்ணம் தாங்கள் பொலிஸார் எனக் கூறிக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்து பதினேழு இலட்சம் பெறுமதியான நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சீருடையில் சென்று கொள்ளையடிக்கும் செயல் தொடர்பாகவும் இது சம்பந்தமாக அப்பாவி மக்கள் கைது செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் துன்புறுத்தப்படுவது தொடர்பாகவும், மலையகத்தின் பல பகுதிகளில் திட்டமிட்ட ஒரு கோஷ்டியினர் மக்களைப் பீதியில் ஆழ்த்தவும் பாதுகாப்புப் படையினர் மீது வெறுப்பை ஏற்படுத்தவும் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் எனவே இது தொடர்பாக அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இ. தொ. க. செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி பாதுகாபபு அமைச்சின் செயலாளரையும் பதுளை மாவட்ட பொலிஸ்மா அதிபரையும் கேட்டுள்ளார்.

தெரணியகல, கண்டி, ஹற்றன், நுவரெலியா, தலகா, பதுளை ஆகிய பகுதிகளில் இவ்வாறான கொள்ளை அதிகரித்து வருகின்றமையும்குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகர்

அதிபர் பிரிவில் உள்ள வர்த்தக நிலையங்கள்சனிக்கிழமைகளில் மாலை 2-00 மணியுடனும் ஞாயிறு முழுநேரமும் மூடப்படவேண்டும் என நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

பழக்கடைகள், பத்திரிகை கடைகள், மண்ணெண்ணெய் விற்பனை நிலையம், மருந்துக் கடைகள், சைக்கிள் திருத்தும் நிலையம், உணவுச்சாலைகள் என்பவற்றிற்கு இதிலிருந்து விதிவிலக்குஅளிக்கப்பட்டுள்ளதென வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

## இனவெறி

யமை போன்ற பல குற்றச்சாட்டுக்கள் அதில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான இனவாத சர்வோதயத்திலிருந்து அதன் வடபகுதி ஊழியர்களை விலகிக்கொள்ளுமாறு அந்தப் பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது சர்வோதயத்திற்கு எதிராக வெளியிடப்பட்ட இரண்டாவது பிரசுரமாகும்.

# கொலைகள் பல்லாயிரம்; வழக்குகள் நூறு இல்லை

சிறிலங்காவில் கடந்த சில ஆண்டுகளில் அரசினால் ஊக்குவிக்கப்பட்ட வன்முறைகளுக்குப் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் பலியாகியுள்ளார்கள். இது தொடர்பாக நூறு வழக்குகளுக்குக் குறைவாகவே நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன என்று மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பாக அரசு விசாரணை நடத்தியது மனித உரிமை அமைப்புகளுக்கு ஓரளவு நம்பிக்கையையும் தருகிறது என்று பி. பி. ஸி. தெரிவிக்கிறது.

சிறிலங்கா அரசு தனது இராணுவத்தின் அட்டூழியங்கள் குறித்து விசாரணை நடத்தியது இதுதான் முதல் தடவை


விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
யாழ். மாவட்டம் நடாத்தும்

## கலை நிகழ்ச்சிகள்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக
ஆதரவில்
பொன் கணேசமூர்த்தியின்
**சந்தனக்காடு**

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக
வடமராட்சிப் பிரிவின் ஆதரவில்
செவ்வானம் இசைக்குழுவின
**எழுச்சிப் பாடல்கள்**

காலம் : 01-02-1992 மாலை 6 30 மணி
இடம் : உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய அரங்கு
குறிப்பு : உரும்பராய் அன்னை பூபதி அரங்கில் நடைபெறவிருந்த இந் நிகழ்ச்சிகள் பார்வையாளரின் வசதிகளை முன்னிட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அன்பளிப்பு : ரூபா 10.00
அனைவரும் வருக
ஆதரவிற்கு நன்றி

(3873) வி பு க ப. கழகம்
யாழ். மாவட்டம்



## மரண அறிவித்தல்

### பொன்னையா சின்னப்பிள்ளை

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா சின்னப்பிள்ளை 31-01-92 இல் காலமானார். இவர் கா. செ. பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரேசு சீதேவிப்பிள்ளையின் அன்பு மகளும், நாகராசா கதிராசிப்பிள்ளையின் அருமைத் தாயாரும், செல்லத்துரை சிவபாக்கியம், கண்ணம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலிங்கம் [சுவிஸ்], சரோஜாதேவி, தங்கராசா, இந்திராதேவி, விமலாதேவி, சோதிராசா, கோசலாதேவி, குகராசா, பாக்கியராசா [லெபனான்], வரதராசா, ரஞ்சினிதேவி, தவமணிதேவி, கமலாதேவி, சிவராசா, உதயகுமாரி [சுவிஸ்), செல்வராசா, நந்தினிதேவி, சியாமளாதேவி, சித்திராதேவி ஆகியோரின் பேர்த்தியுமாவார். நிமல்ராஜ் [சுவிஸ்], சுலக்சனா, சிவப்பிரியா, துளசிகா, சாந்துசன், வினோத், றக்சி ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-02-92 அன்று 3-00 மணியளவில் கோப்பாய் மயானத்தில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முருகையன் கோவிலடி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி,
தகவல், திரு. திருமதி செல்லத்துரை
[சி/3874]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.